**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.510/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw9/Pw7 |
| Name | : தினேஷ் |
| Father/Husband's Name | : முருகேசன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11.06.2026.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தாம்பரம் பணியிடை பயிற்சி மையம் காவல் உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். கடந்த 02.01.2024 அன்று டி9 மறைமலைநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பகல் 15 மணியளவில் பிரவீன்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 5/2024 பிரிவுகள் 294(b), 323,324,506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே **அதசா.ஆ.3 மற்றும் 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லட்சுமிபதி மற்றும் குமரவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன்.

2. அந்த மாதிரி வரைப்படம் **அதசா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.01.2024ம் தேதி எதிரிகளை தேடி வந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மகேந்திரா சிட்டி ஜங்சனில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது வசுந்தராஜ், வினோத்குமார் ஆகியோர்களை விசாரித்த போது அவர்களும் மற்றும் அவர்களுடன் சேர்ந்து மதன் மற்றும் நிஸாந்த் சேட்டு ஆகியோர்களுடன் இந்த வழக்கில் ஈடுபட்டது தெரியவந்து முதல் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஏழுமலை மற்றும் ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் முதல் எதிரியிடம் இருந்து அவர் ஓட்டி வந்த TN-19-AL-8125 என்ற ஆட்டோவையும் மற்றும் 30செ.மீ நீளம் கொண்ட இரும்பாலான கத்தி மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன்.

3. அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துடன் நிலையம் வந்து தேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 3 மற்றும் 4வது எதிரிகள் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றார்கள். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த செங்கல்பட்டு அரசு மருத்துவர் ராதிகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் **அதசா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த படிவம் 95 **அதசா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது, கைப்பற்றப்பட்ட ஆட்டோ மற்றும் கத்தி **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் புலன்

விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகாரை பெறவில்லை என்றாலும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 சம்பவ இடம் சென்று விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், எதிரிகள் 1 மற்றும் 2 யிடம் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும், சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரிகள் மீது தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu